www.tamilarangam.net

# ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அறிக்கை

# EPRLF MANIFESTO

பிரச்சார வெளியீட்டுப் பிரிவு

10 - 10 - 1988

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வரலாற்றுப் பாத்திரம்

1981ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஸ்தாபன பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது சிறிலங்கா அரசுக்கு எதிரான ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் மிகவும் உறுதியான முறையில் தனது பங்களிப்பைச் செலுத்திவந்தது. அதற்காக ஈடிணையில்லாத் தோழர்கள் பலரைத் தியாகம் செய்திருக்கின்றது.

ஈழப் போராட்ட காலத்திலும் சரி, இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்தத்துக்குப் பிந்திய காலகட்டத்திலும் சரி தோழர்கள் யார்? நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்ற விடயத்தில் கருத்துப் பிசகின்றி மிகவும் தெளிவான முறையில் செயற்பட்டு வந்திருக்கின்றது. சந்தர்ப்பவாதப் போக்குகளையோ அல்லது தான் மட்டும் தப்பிக்கொள்ளும் நடைமுறைகளையோ அல்லது பதவிக்காக, அதிகாரத்திற்காக, பணத்திற்காக மக்களையும் போராட்டத்தையும் விலை பேசும் துரோகத்தனங்களையோ ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எந்தக் கட்டத்திலும் மேற்கொண்டதில்லை.

தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும், ஈழ விடுதலைக் குறிக்கோளுடன் போராடிய இயக்கங்கள் மத்தியிலும் ஒற்றுமையையும் சமாதானமான உறவையும் உருவாக்கும் விடயத்தில் அயராது பணியாற்றி வந்திருக்கின்றது.

இதேவேளை, போராட்டத்தின்போது ஒவ்வொரு போராளியினதும், ஒவ்வொரு போராட்ட அமைப்பினதும் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராடி வந்திருக்கின்றது. தமிழ் மக்கள் மத்தியில் அராஜகமும் பாசிசக் கொடூரங்களும் தலைதூக்கிவிடக் கூடாது என்ற நோக்கத்தில் மிகவும் உறுதியாகவும் விடாப்பிடியாகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நடத்திவந்துள்ள போராட்டத்தில் மிகப் பெரும் தியாகங்களைச் செய்யவேண்டி ஏற்பட்டிருக்கின்றது. எத்தனையோ விதமான அவப்பெயர்களை அது சுமக்க வேண்டி ஏற்பட்டிருக்கின்றது. எனினும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தனது தெளிவான பார்வையில் உறுதியான நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வந்திருக்கின்றது. அமைதியும் ஜனநாயகமும் நிலைநாட்டப்படுகின்றவரை அதற்கான போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

ஈழ விடுதலைக் குறிக்கோளுடன் நடத்தப்பட்ட போராட்டம் பிழையான திசை வழிக்குள் சென்று கொண்டிருந்ததனாலும், சிறிலங்கா அரச இராணுவத்திற்கு எதிரான போராட்டத்தில் தமிழ் மக்கள் மனோரீதியிலும் சக்தி ரீதியிலும் புலிகளின் அதிகாரக் கொலை வெறியாட்டத்தினால் பலவீனப்படுத்தப்பட்டதாலும், இதன் காரணமாக தமிழ் மக்களின் உயிர்களும் உடைமைகளும் எந்தவித இலக்குமின்றி அழிந்து கொண்டிருந்ததனாலும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை, தமிழ் மக்களின் உடனடித் தேவை பற்றிய கணிப்பீட்டின் அடிப்படையில் ஏற்றுக்கொண்டது.

புலிகளின் நாசகார துரோகத்தனமான வேலைகளினாலும் புரட்சிகர சக்திகளின் பலவீனத்தினாலும் ஈழ விடுதலைப் போராட்டம் குற்றுயிராகி இருந்த நிலையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தமிழ்ப் பேசும் மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படுவது சமாதானம், ஜனநாயகம், ஒற்றுமையே என அடையாளம் கண்டது. அத்தேவைகளையே மக்கள் மத்தியில் கோரிக்கைகளாக்கியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒப்பந்தத்தை அடுத்த காலகட்டத்தில் தனது வேலைத்திட்டத்தை கிழக்கு மாகாணத்திலிருந்து புனரமைத்துக்கொண்டு மீண்டும் முழுமூச்சோடு செயற்பட ஆரம்பித்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிமானது மக்கள் மத்தியில் ஜனநாயகத்தின் மீதான விழிப்புணர்ச்சியையும், கடந்தகாலத் தவறுகள் பற்றிய மீளாய்வையும் புதிய எதிர்காலத்துக்கான சிந்தனையையும் உருவாக்கும் முயற்சியில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது கருத்துப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தது.

மக்கள் மத்தியில் ஏற்பட்ட ஜனநாயக உணர்வுகளை ஜீரணித்துக் கொள்ள முடியாமலும், சமாதானமான சூழலில் வாழ முடியாமலும் தத்தளித்த புலிகள் 1987ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ஆம் திகதி தமது ஆயுதக் கொடூரத்தை மீண்டும் கட்டவிழ்த்துவிட்டது. நூற்றுக்கு மேற்பட்ட போராளிகளும் இளைஞர்களும் ஒரே நாளில் கொன்று குவிக்கப்பட்டனர். அந்தவேளையில் இந்திய இராணுவம் அந்த நிகழ்ச்சிகளைக் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

அதைத் தொடர்ந்து புலிகளின் உண்ணாவிரதப் பயமுறுத்தல், செப்டம்பர் 28ந் திகதி புலிகளின் கையில் அதிகாரம் சிங்கள மக்கள் மீதான படுகொலைகள், புலேந்திரன் கூட்டத்தினரின் சயனைட் தற்கொலை, இந்தியப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் என நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.

தமிழ் மக்கள், ஒரு குறுகிய காலத்திற்குள், மிகப் பெரும் துன்பத்திற்கு உள்ளானார்கள். இறந்த அப்பாவி மக்களின் எண்ணிக்கை 2000க்கு மேல் என்று கூறப்பட்டாலும் இன்னும் சரியான கணிப்பீடு இல்லை; அழிந்த சொத்துக்களுக்கு அளவு கணக்கில்லை; மக்கள் பட்ட துன்பத்தை வார்த்தைகளில் வடிக்க இயலாது.

இந்தக் காலகட்டத்தில்தான் சிறிலங்கா அரசாங்கம் தனக்கு சாதகமான முறையில் சூழ்நிலைமைகளைப் பயன்படுத்திக்கொண்டு, தான் விரும்பிய விதமாக 'மாகாண சபைகள் சட்டத்தை' வடிவமைத்துச் சட்டமாக்கிக் கொண்டது.

இந்தியப்படைகளுக்கும் புலிகளுக்குமிடையில் தொடங்கிய யுத்தம் சிங்கள பேரினவாதிகளுக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்கள் மீது நேசம் மிக்கவர்கள் போல நடித்து அந்த யுத்தத்துக்குமேலும் மேலும் தூபம் போட்டார்கள். அழிவுகளை அதிகரிக்க வைப்பதில் அக்கறையாக இருந்தார்கள். அதேவேளை, தமிழ் மக்களுக்கு நாடு பிரித்துக் கொடுக்கப்பட்டுவிட்டது என மாகாண சபைக்கு விளக்கம் கொடுத்து பேரினவாத அரசியலை சிங்கள மக்கள் மத்தியில் மேலும் பரப்பினார்கள்.

கடந்த சில ஆண்டுகளாகவே புலிகள் சிங்களப் பேரினவாதிகளுக்கு எல்லா வகையிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் துணைபுரிந்து வருகின்றார்கள். இந்தப் பேரினவாதிகளின் ஒரே நோக்கம் —

(1) இந்தியப் படைகளை இலங்கையைவிட்டு வெளியேற்றுதல் என்ற போர்வையில் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பற்றதோர் சூழ்நிலையை உருவாக்குவது,

(2) எந்தக் காலத்திலும், என்ன காரணத்தின் அடிப்படையிலும் இந்தியாவின் உதவியையோ அல்லது வேறு வெளிநாட்டு நட்பு சக்திகளின் உதவியையோ தமிழ் மக்கள் நாடமுடியாத சூழ்நிலையை ஏற்படுத்துவது,

(3) இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவது,

(4) மாகாண சபைகள் அமைப்பை முற்றாக இல்லாதொழிப்பது.

இவற்றின் மூலம் தமிழ் மக்களை எதிர்காலத்தில் எதற்கும் லாயக்கற்றவர்களாக மாற்றியமைப்பது.........



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தென்னிலங்கையில் ஆயுதம் தரித்த சிங்களப் பேரினவாத இயக்கமான ஜனதா விமுக்தி பெரமுன (JVP) சிங்கள மக்கள் மத்தியில் மேலும் மேலும் வலுவடைந்து வருவதன் காரணமாக, ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தலை எதிர் நோக்கி நிற்கும் சிங்கள வலதுசாரிக் கட்சிகள் பதவி, அதிகாரத்தைப் பிடிக்கும் நோக்குடன் சிங்களப் பேரினவாதத்தை தமக்குச் சாதகமாக்கிக் கொள்வதிலேயே அக்கறையாக இருக்கின்றன.

இவ்வாறு பல்வேறு பகுதியினராலும் வளர்க்கப்படுகின்ற சிங்களப் பேரினவாதமானது வெளிப்படையாக இந்திய எதிர்ப்பு வாதத்தையும் உள்ளடக்கத்தில் தமிழ் மக்கள் ஒடுக்குமுறை நோக்கத்தையுமே கொண்டிருக்கின்றன.

கடந்த எழுபது ஆண்டுகளுக்கு மேலாக படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ள சிங்களப் பேரின மேலாதிக்கவாதத்தின் அடிப்படையாக அமைந்திருந்த உண்மையான உள்ளடக்கங்கள் இன்று மிகத் தெளிவான வடிவத்தில் வெளிப்பட்டு நிற்கின்றன.

சிங்கள பேரின மேலாதிக்க வாதமும் புலிகளின் அதிகாரமோகமும், இன்று மேலோட்டமாகப் பார்த்து மிடத்து இந்தியா சம்பந்தப்பட்ட விடயத்தில், ஒரே நோக்கத்தை உடையவையாகவும் ஒன்றுக்கு ஒன்று துணையாக இருக்கக் கூடியவையாகவும் தோற்றமளிக்கின்றன ஆனால் அவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டவையாகும். எனினும் இன்று கொலை வெறிபிடித்து ஒன்றுக்கு ஒன்று துணை புரிந்து கொண்டிருக்கின்றன.

தமிழ் பேசும் மக்களின் பொது நலனில் அக்கறை கொண்டவர்கள் எவரும் இன்றைய சமுதாய கால கட்டத்தில், இலங்கையில் நிலவும் அரசியல் நிலைமையில் இந்திய எதிர்ப்பு வாதிகளாக இருக்க முடியாது – இருக்கவும் கூடாது.

இந்திய அரசாங்கத்தின் நடைமுறையில் காணப்படும் கொள்கை ரீதியான தவறுகளையும், இந்திய இராணுவத்தினரின் நடத்தைத் தவறுகளையும் விமர்சித்தல், கண்டித்தல் மூலம் திருத்த முயல்வதற்குப் பதிலாக அவ்விடயங்களை இந்திய எதிர்ப்பு விவகாரமாக மாற்றியமைப்பது - சித்தரித்துக் காட்டுவது மிகவும் தவறானதாகும்.

இன்றைய கால கட்டத்தில் இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களுக்கு இந்தியாவின் நட்பும் உதவியும் அவசியமானது என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுதியாக நம்புகின்றது.

சிங்கள, தமிழ் இன ஒற்றுமைக்கு இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தை ஓர் ஆரம்ப அடிப்படையாக ஏற்று அதை மேலும் நல்ல முறையில் வளம்படுத்துவதற்கும் பலப்படுத்துவதற்கும் முயற்சி செய்வதே இன ஒற்றுமை விரும்பும் முற்போக்கு ஜனநாயக சக்திகளின் கடமையாகும்.

தமிழ்ப் பேசும் மக்களின் நியாய பூர்வமான உரிமைகளை முழுமையாக அங்கீகரித்தல் தமிழ் மக்களின் பாதுகாப்பைச் செம்மையான முறையில் உத்தரவாதம் செய்தல் போன்றவற்றில் அக்கறை செலுத்தாமல் பதவிகளையும் அதிகாரத்தையும் பிடிப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டு 'ஒப்பந்தங்களைக் கிழிப்போம்' 'மாகாணசபைகளைக் கலைப்போம்' என்று கூச்சல் போடும் சிங்கள இனவாதக் கட்சிகளுக்கு நாம் சொல்லக் கூடியது என்னவென்றால் 'நீங்கள் இன்று போடும் கூச்சல்களை உண்மையில் நடைமுறையாக்குவீர்களானால் சுதந்திர ஈழம் ஒன்று அமைவதற்கு நீங்களே வழி வகுத்தவர்கள்' என்று எதிர்காலத்தில் நாங்கள் சொல்ல வேண்டியவர்களாவோம் என்பது தான்.

இதே வேளையில், தென்னிலங்கையிலுள்ள ஜனநாயக – முற்போக்கு சக்திகளுக்கு நாம் கூற விரும்புவது என்னவெனில், 'சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு வகிக்கும் பேரினவாதமும் முதலாளித்துவ அரசியற் கட்சிகளின் பதவி, அதிகார மோகப்போட்டாபோட்டி அரசியலும் மிக வேகமாக ஓர் அராஜக அரசியற் கொலைக்களத்தை உருவாக்கும் சாத்தியத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊதக் கொண்டிருக்கின்றன: இதன் விளைவாக சிங்கள மக்கள் மத்தியில் அநியாயமாக ஓட இருக்கும் இரத்த ஆற்றை நீங்கள் முன் கூட்டியே தரிசனம் செய்து கொள்ளுங்கள்; அது தொடர்பாக மிக எச்சரிக்கையோடும் விரைவாகவும் திட்டமிட்டு செயலாற்றுங்கள்.

இதே சந்தர்ப்பத்தில், கொலை வெறி பிடித்து மக்கள் விரோதிகளாக அலையும் புலிகளுக்கு நாங்கள் கூறவிரும்புவது என்னவென்றால் உங்கள் தலைமையின் குறுகிய அரசியற் பார்வையால் உங்களை நீங்களே அழித்துக் கொண்டீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். தொடர்ந்தும் தவறான பாதையில் செயற்படாமல் உங்களைத் திருத்திக் கொள்ள முற்படுங்கள் என்பதுதான்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் நீண்ட கால இலட்சியம்.

— இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்கள் தனித்துவமானதொரு தேசிய இனம் என்ற ரீதியில் தமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசத்தில் முழுமையான சுயநிர்ணய உரிமையோடும், சம உரிமையுள்ள பிரஜைகளாக சிங்களமக்களோடு சமாதானமாகவும் வாழவேண்டும்.

— இலங்கைத் தீவு முழுவதும் ஒரு சோசலிச சமுதாயம் உருவாக்கப்படவேண்டும்.

என்பனவாகும்.

இந்த இலட்சியத்தை அடைவதற்காக நாம் தொடர்ந்தும் விடாப்பிடியாகப் போராட வேண்டும்.

இந்த இலட்சியப் போராட்டம் சீரான முறையில் முன்னெடுக்கப்படுவதற்கும் தடையின்றி முன்னேறிச் செல்வதற்கும் இன்றைய கால கட்டத்தில் சமுதாயத்திற்குத் தேவைப்படுவது உடனடி அமைதி, அடிப்படை ஜனநாயகம், மக்களுக்கிடையில் ஒற்றுமை, போராளிகளுக்கிடையில் ஒற்றுமை, புனர்வாழ்வு, புனரமைப்பு, புத்துணர்ச்சி, புரட்சிகர சிந்தனை, புரட்சிகர இயக்கத்தில் பரந்து பட்ட மக்களின் பங்களிப்பு என்பனவாகும்.

இன்றைய நிலையில், மேற் குறிப்பிட்ட அடிப்படை விடயங்கள் ஏற்படுத்தப்படாமல் ஒரு புரட்சிகர இயக்கம் நல்ல எதிர் காலத்திற்கான ஓர் ஆரம்பக் கட்டத்தைக் கூடச் சந்திக்க முடியாது.

ஒரு புரட்சிகர ஸ்தாபனமானது சமுதாயத்தின் அகப்புற நிலைமைகள் தானாக மாற்றமாகி வரும்வரை வாளா வெட்டியாகக் கைகட்டிக் காத்திருக்க முடியாது அல்லது காற்றடிக்கிற பக்கமெல்லாம் சாய்ந்து கொண்டும் திரிய முடியாது.

ஒரு புரட்சிகர ஸ்தாபனம் என்பது சமுதாயத்தின் ஒவ்வொரு கால கட்டத்திலும் அவ்வக்கால கட்டத்தின் அகப்புற நிலைமைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, சமுதாயத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கான தனது வரலாற்றுக் கடமைகளை ஆற்றுவதேயாகும்.

அந்த அடிப்படையிலேயே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தனது இன்றைய வரலாற்றுக் கடமைகளை வகுத்துக்கொள்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்ப் பேசும் மக்களின் இன்றைய நிலை

1. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஓர் அரசாங்கமோ ஒரு குறிப்பிட்ட திட்டவட்டமான சட்டத்தின் ஆட்சியோ, சட்ட நிர்வாக ஒழுங்கோ, சீரான சிவில் நிர்வாகமோ இல்லாமல் அவரவர் நினைத்தபடி செயற்படும் அராஜகமே தலை தூக்கி நிற்கின்றது.

2. மக்கள் உயிர், உடைமைக்குப் பயமில்லாமல் போக்குவரத்துச் செய்யவோ நடமாடவோ முடியவில்லை. எல்லாப் பக்கமும் ஆபத்துக்கள் சூழ்ந்த நிலைமையே காணப்படுகின்றது. ஒரு பக்கம் இந்திய இராணுவத்தினரின் புலிகளைத் தேடும் நடவடிக்கைகளால் மக்கள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் அதேவேளை மறுபக்கம் அரசியல் முலாம் பூசிக் கொண்டு சில இயக்கங்கள் கொலைகார, கொள்ளைக்காரக் கூட்டத்தினர் வரைமுறையற்ற ரீதியில் மக்கள் விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். நாளும் பொழுதும் கொலைகள் சர்வ சாதாரணமானவையாக்கப்பட்டிருக்கின்றன. கொலைகாரர்கள் என்ன முத்திரைகளைக் குத்துகிறார்களோ அந்த முத்திரைகளோடு, கேள்வி மறுமொழியின்றி, சாவுகள் மிகவும் மலினமாக்கப் பட்டிருக்கின்றன.

3. மக்களின் பேச்சு, எழுத்து மற்றும் கருத்துச் சுதந்திரங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் ரீதியில் எவரும் தமது கருத்துக்கள் இலட்சியங்களின் அடிப்படையில் கூடவோ, கலந்துரையாடவோ, செயற்படவோ முடியாமல் ஒடுக்கப்பட்டிருக்கின்றனர். மக்கள் தமது அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுகின்றபோது அதற்காகக் குரலெழுப்பவோ, அணி திரண்டு போராடவோ முடியாமல் ஆயுதக் கொடூரங்களினால் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

4. தமிழ் மக்களினுல் முறையாக அங்கீகரிக்கப்பட்ட தலைமை, பிரதிநிதிகள் என்று யாரும் இல்லாதபடியினால்

   1. ஒவ்வொரு குழுவினரும் கட்சியினரும் தாம் தான் மக்களின் தலைமை, பிரதிநிதிகள் என தமக்குத் தாமே முத்திரை குத்திக்கொண்டு எந்தவித கட்டுப்பாடுமின்றி தாம் நினைத்தபடியெல்லாம் செயற்பட்டு வருகின்றனர்.

   2. இந்திய அரசாங்கமும், சிறிலங்கா அரசாங்கமும் தாம் நினைத்தபடியெல்லாம் தமிழ் மக்களின் விவகாரத்தில் தாமே முடிவெடுத்துச் செயற்படுகின்றன. தமிழ் மக்களின் சார்பில் இதனைத் தட்டிக் கேட்பதற்கு நியாயாதிக்கமுடைய யாரும் இன்று இல்லை என்னும் நிலை காணப்படுகின்றது.

5. சில இயக்கம் சார்ந்து செயற்படும் கும்பல்கள் ஒரு பக்கம் காட்டுமிராண்டித் தனமான கொலைகளைச் செய்துகொண்டு மறுபக்கம் வரி முறை மூலமும், வழிப்பறி, ஆள் கடத்தல், துப்பாக்கி முனை மிரட்டல் மூலமும் பொது மக்களின் பெருந் தொகையான சொத்துக்களை நாளாந்தம் கொள்ளையடித்து வருகின்றன. இந்த இரண்டு கும்பல்களும் தமது கொள்ளை நடவடிக்கைகளுக்கு முகமூடியாக 'திரீஸ்டார்' என்னும் பெயரைப் பயன்படுத்தி வருகின்றன. இதனால் மக்கள் மத்தியில் ஆங்காங்கே, இந்தச் சம்பவங்கள் தொடர்பாக, உண்மை என்னவென்று தெரியாமல் குழப்பகரமான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

6. பெரும்பான்மையான மக்கள் புலிகளின் துப்பாக்கிக் கொடூரத்துக்குப் பயந்து வாய்மூடி மௌனிகளாக இருக்க, புலிகளும் புலிகளின் அதி தீவிர ஆதரவாளர்களும் தமது விருப்பங்களை மக்களின் அபிப்பிராயங்கள் எனப் பிரச்சாரப்படுத்தி வருகின்றன.

பலபேர் புலிகளின் கொலை வெறிப் பிடியில் அகப்படாமல் இருப்பதற்காக அவ்வப்போது தாம் தப்பிக் கொள்வதற்கு வசதியாக தமது அபிப்பிராயம் என்ற பெயரில் ஏதாவது கூறிவிட்டுச் சென்றுவிடுகின்றனர். ஆனால் இது திரட்சியடைந்து பிழையானதொரு அபிப்பிராயக் கணிப்பை உருவாக்குகின்றது.

தமிழ்ப் பிரமுகர்கள் என இன்று உலாவித்திரியும் சிலபேர், இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கும் கொலைகார, கொள்ளைக்கார கூட்டங்களுக்குச் சார்பாகச் செயற்படுவதன் மூலம் தமது பதவிகளையும் பிரமுகத்தனத்தையும் பாதுகாத்துக் கொள்வதோடு பொருளாதார ரீதியாகவும் இலாபமடைகின்றனர். தமிழ்ச் சமுதாயத்தில் இன்று நிலவும் அராஜகத்தையும் கொலைக் கலாச்சாரத்தையும் எண்ணையூற்றி வளர்ப்பதில் இவர்கள் ஒரு பிரதான பாத்திரத்தை வகிக்கின்றனர்.

7. தமிழ் மக்கள் அமைதியையும், ஜனநாயகத்தையும், புதிய பொருளாதார வாழ்வையும் எதிர்பார்த்து நிற்கின்றனர். வெவ்வேறுபட்ட அபிப்பிராயபேதங்களின் மத்தியிலும், அவற்றின் தேவையை அனைவரும் தொடர்ந்து வலியுறுத்தியே வருகின்றனர்.

ஆனல் நிலவுகின்ற நிலைமைகளைப் பார்த்தால், கடந்தகால யுத்தங்களால் சேதமாக்கப்பட்ட கல்வி நிலையங்கள், சுகாதார நிலையங்கள், வீதிகள், வீடுகள், பொது நிறுவனக் கட்டிடங்கள், தொடர்பு சாதனங்கள், போக்குவரத்து வசதிகள், உற்பத்தி, வர்த்தக நடவடிக்கைகள் ஆகியவற்றைப் புதுப்பிப்பதற்கு, பத்துயிர்ப்போடு இயங்க வைப்பதற்கு முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

மக்கள் தமது அன்றாட பொருளாதார வாழ்வை-வேலைக்குச் செல்லுதலை, வியாபாரம் செய்தலை, விவசாயம் செய்தலை, மீன்பிடிக்கச் செல்லுதலை-ஒழுங்கான முறையில் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

பணக்காரர்களும் பெரிய வியாபாரிகளும் கொள்ளை லாபங்களினாலும், கள்ள வியாபாரங்களினாலும் மேலும் பணம் பெருகிக் கொண்டிருக்க, நடுத்தர வர்க்கத்தினர் வறியவர்கள் ஆக்கப்படுகின்றார்கள்; ஏற்கனவே வறியவர்களாக ஆக்கப்பட்டவர்கள் பசி, பட்டினிப் படுகுழிக்குள் தள்ளப்படுகின்றார்கள்.

உழைத்து வருமானம் பெற்று சுயமானத்தோடும் கௌரவத்தோடும் வாழ்ந்த தமிழ்ச் சமுதாயம் இன்று அகதிகளாகக் கையேந்தி வாழும் நிலை தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

இவ்வாறாக பல்வேறு முனைகளிலும் குறிக்கோள் எதுவுமற்ற ரீதியில் அவதி நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் ஓர் அடிப்படையான மாற்றமொன்றை வேண்டி நிற்கின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பேரினவாதமும் தென்னிலங்கை அரசியல் நிலையும்

1. வெளிப்படையில் இந்திய எதிர்ப்பு வாதத்தையும் உள்ளடக்கத்தில் தமிழினத்தின் மீதான ஒடுக்கு முறை இலக்கையும் கொண்ட சிங்கள பேரின மேலாதிக்கவாதமானது இன்று பாராளுமன்ற, சட்ட, நிர்வாகங்கள் என்ற அளவில் மட்டுமல்லாது அதற்கும் மேலாக தேசபக்தி என்ற போர்வையில் பாசிச, அராஜகக் குணாம்சங்களோடு மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களைப் போல் தமிழ் பேசும் மக்களின் உயிர் உடைமைகளுக்குச் சேதம் விளைவித்து, தமிழ் மக்களை அகதிகளாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது சிங்கள பேரினவாதத்துக்குச் சுலபமானதாக இல்லை. காரணம் இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்தமும், இந்தியப் படைகளின் இருப்பும் ஆகும்.

இதனால் இன்று தனது தமிழின எதிர்ப்புக் குணாம்சத்தை மறைத்துக்கொண்டு சிங்களப் பேரினவாதமானது தான் தடையின்றிச் செயற்படுவதற்குத் தடையாயிருக்கும் இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்தம், இந்தியப்படைகளின் இருப்பு ஆகியவற்றை உடனடியாக இல்லாமற் செய்வதையே பிரதான இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இரு பெரும் சிங்கள வலதுசாரிக் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றையொன்று போட்டிபோட்டுக்கொண்டு சிங்களப் பேரினவாதத்தின் அதியுயர்ந்த பிரதிநிதிகள் தாங்களே என்று நிரூபிப்பதிலேயே அக்கறை செலுத்துகின்றன. அதிலும் குறிப்பாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சி இந்தப் பிற்போக்கு நடவடிக்கையை மேற்கொள்வதில் அதி தீவிரமாக முன்னணி வகிக்கின்றது. இந்த வலதுசாரிகளின் போட்டா போட்டியானது சிங்கள மக்களை ஆயுதக் கொடூரத்தின் பிடியில் மேலும் வலுவாக அகப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

ஜனதா விமுக்திப் பெரமுன (JVP)வின் பாசிச அராஜகம் வலுவாக விரிவடைந்து வருகின்றது. JVP யின் கொலை வெறியாட்டத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை மேலும் மேலும் அரச இயந்திரங்கள் படிப்படியாக இழந்துவருகின்றன, அரச இயந்திர அமைப்புக்குள்ளும் JPV க்குச் செல்வாக்கு தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது.

2. கடந்த காலங்களில் தமது பதவி, அதிகார நோக்கங்களுக்காக சிங்கள வலதுசாரி அரசியல்வாதிகளால் பயன்படுத்தப்பட்டுவந்த சிங்களப் பேரினவாதமானது இன்று கட்டுப்படுத்தமுடியாத சக்தியாக வளர்ந்து நிற்கின்றது. இந்தப் பேரினவாத வெறிக்கு இடதுசாரிகள் மட்டுமல்லாது வலதுசாரிகளும் உயிர்ப்பலி கொடுக்க வேண்டியுள்ளது.

3. சிறிலங்காவின் அரச அதிகாரமும் நிர்வாகமும் மேலும் மேலும் இராணுவத்தைச் சார்ந்து நிற்கவேண்டிய நிலையை நோக்கியே நகருகின்றன. ஒரு காலகட்டத்தில் தமிழ் மக்களின் நியாயபூர்வமான போராட்டத்தைத் தனது இராணுவ வலிமையைக் கொண்டு அடக்கிவிட முனைந்த சிறிலங்கா அரசாங்கத்தினர் இன்று இராணுவத்தின் பலத்த பாதுகாப்பின்றி சிங்கள மக்கள் மத்தியில் கூட நடமாட முடியாத நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதேவேளையில் இடதுசாரி சக்திகள் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காகவும் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காகவும் அரசுக்கு எதிராகப் போராட முடியாத வகையில் அராஜகக் கொலை வெறியர்களின் ஆயுதங்கள் இடதுசாரிகளைக் குறி பார்த்து நிற்கின்றன.

JVP யின் கொலைவெறிக்குப் பயந்து அவர்கள் போடும் கட்டளைக்குத் தலை யாட்டும் நிலைமை சிங்கள மக்கள் மத்தியில் படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

தென்னிலங்கையில் இன்று வளர்ச்சியடைந்து வரும் அம்சங்களில் எந்தவித முற் போக்குத் தன்மையையும் காணமுடியவில்லை. மாறாக பிற்போக்கு, எதிர்ப்புரட்சிகரக் குணாம்சங்களே மிகவும் முனைப்போடு கூர்மையடைந்து வருகின்றன.

சிங்கள மக்கள் மத்தியில் கண்மூடித்தனமான அராஜகக் கொலைக்களமொன்று கட்டவிழ்த்துவிடப்படுவதற்கான நிலைமைகளே மேலும் வளர்ந்து வருகின்றன.

4. சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இடதுசாரி, ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளின் ஆளுமை மேலும் மேலும் பலவீனமடைந்து செல்லுகின்றது. இதனால் எதிர்வரக்கூடிய அண்மைக் காலங்களில் அவர்களின் பாத்திரம் எவ்வளவு தூரம் தாக்கமுடையதாக இருக்கப்போகின்றது என்பது இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது.

தென்னிலங்கையின் மாகாண சபைத் தேர்தல்கள் மூலம் அரசியல் ரீதியாகக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஓர் அடித்தளம் மிக்க, பலமான, சீரான ஒரு நிலையை உருவாக்குவார்கள் என உறுதியாக எதிர்பார்க்க முடியாமலுள்ளது. சூழவர நிலவும் நிலைமைகளின் தாக்கத்துக்கு இழுபட்டுச் செல்லும் போக்கே அவர்கள் மத்தி யில் பரவலாகக் காணப்படுகின்றது.

5. சிங்கள மக்கள் மத்தியில் ஒரு பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால் இன்றைய நிலைமை யில் பாரிய மாற்றங்கள் ஏற்படும் எனப் பரவலாக நம்பப்படுகின்றது.

பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டியது இன்று தென்னிலங்கையின் அரசியல் நிலைமையைப் பொறுத்தவரையில் அவசியமானது எனினும்கூட, அவ்வாறானதொரு தேர்தல் சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் இன்றைய உணர்வுகளுக்கு ஒரு வடிகாலாக மட்டும் அமையுமேதவிர, இன்றைய குழப்பமான நிலைமைகளுக்குத் தீர்வு தரும் ஒன்றாக அமையமாட்டாது.

ஏற்கனவே மோசமடைந்துவிட்ட அரசியல், பொருளாதார, சமூக அம்சங்களில் அடிப்படையான மாற்றம் ஏற்படாத வரை இன்றைய குழப்பங்களுக்குத் தீர்வு இல்லை.

ஆனால், இன்று சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு வகிக்கும் சக்திகள் நிலை மைகளை மேலும் மோசமாக்கக்கூடியவையே தவிர நல்ல தீர்வு ஒன்றை உருவாக்கக் கூடியவை அல்ல.

இன்று மிக மோசமான பாதையில் சென்றுகொண்டிருக்கும் தென்னிலங்கையின் அரசியல் நிலைமை ஒரு கொலைக்கள இரத்த வெள்ளத்தைச் சந்திக்காமல் தப்புவதற் கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாகவே தென்படுகின்றன.

தென்னிலங்கையில் எதிர்வரப்போகும் இந்த நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு வடக்கு – கிழக்கின் அரசியல் நிலைமைகளை அமைத்துக்கொள்வது தமிழ்ப் பேசும் மக்களுக்கும், சிங்கள மக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகளுக் கும் அவசியமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாகாண சபைகள் அமைப்பும் மாகாண சபைத் தேர்தலும்

1. இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்த அடிப்படையில் சில குறைபாடுகளைக் கொண்டுள்ள போதிலும், தமிழ் இயக்கங்களின் பிரதிநிதிகளினை முறையாகக் கலந்தாலோசிக்காமல் இந்திய, இலங்கை அரசுகளினால் அவசரமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையெனினும் கூட, தென்னாசிய நாடுகளுக்கிடையேயான அரசியல் உறவையும், ஈழப்போராட்டத்தின் கடந்த காலப்போக்கு நிலையையும், சிறிலங்கா இராணுவத்தின் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரத்தினால் தமிழ் மக்கள் அந்தரித்து நின்ற நிலையையும் தெளிவாகப் புரிந்து கொண்டவர்கள் அனைவரும் இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதன் அவசியத்தையும் தவிர்க்க முடியாத நிலையையும் புரிந்து கொள்வார்கள்

2. இந்தியப் படைகளுக்கும் புலிகளுக்குமிடையில் சண்டை நடந்து கொண்டிருந்த வேளையில் சிறிலங்கா அரசாங்கமானது மாகாண சபைகள் மசோதாவைத் தான் விரும்பிய விதமாக வடிவமைத்து அவசர அவசரமாக சட்டமாக்கிக் கொண்டது.

மாகாணசபைகள் அமைப்பானது தமிழ் பேசும் மக்களின் உரிமைகள், அபிலாஷைகளை, பாதுகாப்பை அடிப்படையில் முழுமையாக உத்தரவாதம் செய்கின்றது எனக் கூற முடியாத போதிலும், இம்மாகாண சபைகள் அமைப்பை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் ஒரு கட்டமாக ஏற்றுச் செயற்படுவது இங்கு அவசியமாக உள்ளது.

இதேவேளை இவ் அமைப்பின் சட்ட நிர்வாக அதிகாரத்தைப்பயன்படுத்தி உடனடியாக எதிர்வரும் காலகட்டத்தில் தமிழ்ப் பேசும் மக்களுக்கும், தமிழ் மக்களின் பிரதேசத்திற்கும், சமுதாயத்தின் எதிர்காலத்திற்கும் தேவையான விடயங்களை எவ்வளவுக்கு ஆற்ற முடியுமோ அவற்றை மேற்கொள்வது அவசியமாகும்.

3. வடக்கு – கிழக்கு மாகாணங்களின் மாகாண சபையானது எவ்வளவு தூரம் அதிகாரமுடையது, எவ்வளவுக்கு சட்ட நிர்வாக விடயங்களைச் சாதிக்கும் வல்லமை உடையது என்பதற்கு அப்பால் இந்திய – இலங்கை, சமாதான ஒப்பந்தத்தின் மூலம் சட்ட பூர்வமாக உருவாக்கப்பட்டிருக்கும் இவ் அமைப்பை —

(அ) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈழமக்களின் பிரதிநிதிகள் சபையாக,

(ஆ) ஈழமக்களின் அபிலாஷைகளை உலகுக்கு வெளிப்படுத்தும் சபையாக,

(இ) ஈழமக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை நெறிப்படுத்தும் தலைமையைத் தருகின்ற சபையாக,

தமிழ் பேசும் மக்கள் இதனை மாற்றியமைக்க வேண்டும்.

4. மாகாண சபைகள் வழங்கும் சட்ட, நிர்வாக அதிகாரமானது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பினும்கூட இன்றைய நிலைமையில் அதைப் பயன்படுத்தி வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைதி, ஜனநாயகம், மக்களின் பாதுகாப்பு ஆகியவற்றை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை உறுதியாக மேற்கொள்வதோடு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகளை எவ்வளவு தூரம் விரிவாகவும் துரிதமாகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கொள்ள முடியுமோ அவற்றை மேற்கொள்வது தமிழ்ப் பேசும் மக்களின் நீண்ட கால நலன்களுக்கு மிகவும் அவசியமாகும்.

இதேவேளை தமிழ்ப்பேசும் மக்களின் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தக்கூடிய அளவுக்கு மாகாண சபைகளுக்கான அதிகாரத்தை உயர்த்துவதற்கான போராட்டமும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

5. வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான மாகாண சபையானது தற்காலிகமாக ஒரே மாகாண சபையாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள போதிலும், தமிழ்பேசும் மக்களின் மீது பூரண நம்பிக்கை. வைத்து வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிரந்தர இணைப்புக்காகப் போராடுவதுவும் இங்கு அவசியமாகும்.

தமிழ்ப்பேசும் மக்களின் மத்தியில் சமத்துவ உறவை வளர்த்தெடுப்பதற்கான அடிப்படைகளை உருவாக்குவதன்மூலம் தமிழ்ப்பேசும் மக்களின் ஒருமைப்பாட்டை பலப்படுத்துவது; அதன்மூலம் தமிழ்ப்பேசும் மக்கள் மத ரீதியிலோ பிரதேச ரீதியிலோ யாராலும் பிரிக்கப்பட முடியாதவர்கள் என்னும் நிலையை உருவாக்குவது இங்கு அடிப்படையான தேவையாகும்.

6. இங்கு ,வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தலானது ஒரு மாகாண சபைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் என்பதற்கு மேலாக பல்வேறு வகைகளில் அரசியல் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது :

— ஆயுதக் கொடூரங்களினால் மௌனிகளாகிப் போயிருக்கும் மக்கள் உண்மையில் அவர்கள் மனங்களில் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவதற்கும்,

— தமிழ்ப்பேசும் மக்களின் தலைமை, பிரதிநிதிகள் யார் என்பதை மக்கள் தீர்ப்பு மூலம் அடையாளம் கண்டுகொள்வதற்கும்,

— அராஜகம், சிவில் நிர்வாகச் சீர்குலைப்பு ஆகிய போக்குகளை இல்லாதொழிப்பதிலும், சட்டத்தின் ஆட்சி ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றை நிலைநிறுத்துவதிலும் மக்களின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்கும்

இந்த மாகாண சபைத் தேர்தல் ஒரு முக்கிய பாத்திரத்தை வகிக்கின்றது.

7. புலிகளும் மற்றும் சில மக்கள் விரோதக் கும்பல்களும் மக்கள் தமது தீர்ப்பு உரிமையைப் பாவிப்பதைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் ஆயுதக் கொடூரத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்காகத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றன.

மக்களின் தீர்ப்பைச் சந்திக்கத் திராணியில்லாத இந்தக் குழுக்கள் மக்கள் தீர்ப்பளித்து விடாமல் தடுத்து விடவேண்டுமென்பதில் அக்கறை செலுத்துகின்றன.

இதுவும் ஒரு வகையில் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையைப் பறிக்க முயலும் விடயமே.

ஆயுத வலிமை மூலம் எதிர்ப்படைகளை எதிர்த்துப் போராடுவது என்பது வேறு. ஆயுதங்கள் மூலம் மக்களது அபிப்பிராயங்கள் வெளிப்படாது தடுப்பது என்பது வேறு. மக்களைப் பயமுறுத்தி மக்கள் மீது அதிகாரம் செலுத்த நினைப்பவர்கள் மக்கள் விரோதிகளே. அவ்வாறான சக்திகளுக்கெதிராக மக்கள் எல்லா வடிவிலும் போராட வேண்டும். இந்த மக்கள் விரோத சக்திகளின் ஆயுத வலிமைக்கு மக்கள் அடிபணிந்தால் மக்கள் எந்தக் காலத்திலும் தமது அடிப்படையான உரிமைகளையும் இழந்தே வாழ வேண்டி நேரிடும். இதைத் தெளிவாக உணர்ந்து துணிவோடு செயலாற்றுவது தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரினதும் கடமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது நீண்ட போராட்டத்தின் பாதையில் இப்போதைய தேவைகள்

1. வடக்கு – கிழக்கு மாகாணங்களில் நிலவும் அராஜக நிலைமைகளை இல்லாதொழித்து தமிழ்ப் பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் அரசாங்கம் ஒன்று இங்கு செயற்பட வழிவகுத்தல்,

2. மக்களின் பாதுகாப்பு, சீரான நிர்வாகம், சட்டத்தின் ஆட்சி, சட்ட ஒழுங்கு என்பன வற்றை நிலை நாட்டத் தேவையான பாதுகாப்புப் படை, நிர்வாக அமைப்பு ஆகிய வற்றை உருவாக்கி, அவை சீராக இயங்கச் செய்தல்,

3. புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை விரிவான முறையில் துரிதப்படுத்தி அக திகளாக அனைத்து மக்களும் புது வாழ்வு பெறவும் புதிய நம்பிக்கைகளோடு எதிர் காலத்தை நோக்கி நடை போடவும் வேண்டிய நடவடிக்கைகளை மேற் கொள்ளல்,

4. தமிழ்ப் பேசும் மக்கள் மத்தியிலும், தமிழ் இயக்கங்கள் மத்தியிலும் நிலவும் பகைமை பேதங்களை நீக்கவும் சுமுகமான உறவுகள் வலுவடையவும் வேண்டிய நடவடிக்கை களை மேற் கொள்ளல்,

5. சாதி ரீதியான, பிரதேச ரீதியான ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிராக அடிப்படை அரசியல், பொருளாதார சமூக ஏற்பாடுகளை மேற்கொள்ளல்,

6. கொலைகளுக்கு எதிரான ஒரு கலாச்சாரத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் வளர்த் தெடுப்பதோடு, மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி மோதலை உருவாக்குவோர், கட்டாய பண வசூலிப்புக்கள் கொள்ளையடித்தல் ஆகியவற்றை மேற் கொள்வோர் ஆகி யோருக்கு எதிராகச் சட்டபூர்வமாகக் கடும் நடவடிக்கைகளை மேற் கொள்ளல்,

7. மக்கள் மத்தியில் யாரும் தங்களது கருத்துக்களை மற்றவர்களின் அடிப்படை உரிமை களைப் பாதிக்கா வகையில் - முன்வைக்கவும், தமது கருத்துக்களை, கோரிக்கைகளை யொட்டிய போராட்டங்களைத் தடையின்றி முன்னெடுக்கவும் நிலைமைகளை உருவாக் குதல்.

8. எவரது அடிப்படைச் சுதந்திரமும் பாதிக்கப்படும் போது அவர்கள் தடையின்றிக் குரல் எழுப்பவும் நீதி கேட்கவும் வழிவகை செய்தல்.

9. ஊழல் பேர்வழிகள், ஏமாற்றுக்காரர்கள். கொள்ளை லாபம் அடிப்போர், போதை வஸ் துக்கள் வியாபாரம் செய்வோர் மற்றும் சமூக கலாச்சாரச் சீரழிவு நடவடிக்கைகளை மேற்கொள்வோருக்கு எதிராக சட்ட பூர்வமாகக் கடுமையான நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

10. அகதிகள், அநாதைகள் என்ற நிலையில் தமிழ் மக்கள் வாழும் நிலையை இல்லா தொழித்தல்.

11. உணவில்லை, வீடில்லை, உடையில்லை, தொழிலில்லை, கல்வியில்லை, அடிப்படைச் சுகாதார வசதி கூட இல்லை என்னும் நிலையை இல்லாதொழிப்பதை இலட்சியமாகக் கொண்டு செயற்படல்.

www.tamilarangam.net

12. யுத்தங்களால் சேதமாக்கப்பட்ட பொதுச் சொத்துக்கள் அனைத்தையும் புனரமைத்தல், தனியார் சொத்துக்கள் புனரமைக்கப்படுவதற்கான அத்தனை ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் வழங்குதல்.

13. கடந்த கால யுத்தச் சீரழிவுகளினால் விதவைகளானோர், அநாதைகளானோர், அங்கவீனர்களானோர் ஆகியோரின் எதிர்கால வாழ்வு தொடர்பாக மிகவும் கூடுதலான அக்கறை செலுத்துதல்.

14. — தமிழ்ப் பேசும் மக்களின் வாழ்விடப் பிரதேசங்களை விதிகளாலும், பொருளாதாரத் திட்டங்களாலும் பொருக்கலாச்சாரத்தாலும் ஒருங்கிணைத்தல்.

— தடையற்ற கல்வி வளர்ச்சிக்கான அத்தனை முயற்சிகளையும் மேற்கொள்ளல்.

— மனித வளங்களையும் இயற்கை வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்த வழிவகை செய்தல்; தமிழ்ப் பேசும் மக்களின் பிரதேசம் கைத்தொழில் ரீதியாக முன்னேற்றம் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளல்.

— விவசாயிகளின் வாழ்வில் வருமான உத்தரவாதத்தையும் முன்னேற்றத்தையும் உருவாக்க வகை செய்தல்.

— மீன் பிடித்தொழிலாளர் வாழ்க்கையில் உத்தரவாதத்தை உருவாக்குவதோடு மீன் பிடித்துறையில் நவீன மாற்றங்களை உருவாக்க முயற்சிகள் செய்தல்......

ஒட்டுமொத்தத்தில், நீண்டகால இலக்கான சோசலிச சமுதாய மாற்றத்தைக் கருத்தில் வைத்துக்கொண்டு, இன்றைக்கு இந்த மாகாண சபை அமைப்பில் உள்ள அதிகாரங்களையும் வாய்ப்புக்களையும் எவ்வளவு தூரம் உச்சக்கட்டம் பயன்படுத்த முடியுமோ அவ்வளவையும் தவறாது பயன்படுத்துதல்.

15. தமிழ்ப் பேசும் மக்களின் கலை, இலக்கியம், கலாச்சாரம் என்பன முற்போக்கான பாதையில் மறுமலர்ச்சி பெற்று வளர்ச்சியடைவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் மேற்கொள்ளல்.

16. மலையக மக்கள் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ்ப் பேசும் மக்களிலிருந்து பிரிக்கப்பட முடியாதவர்கள் என்னும் அடிப்படையில் மலையக மக்களின் பாதுகாப்பு, தனித்துவம், அரசியல் பொருளாதார சமூக உரிமைகள் நிலை நாட்டப்படுவதற்கான அனைத்து நிலைமைகளையும் ஏற்படுத்துதலும் – தொடர்ந்து போராடுதல்.

17. 1984ம் ஆண்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 1வது காங்கிரஸின் தீர்மானத்தின் அடிப்படையில் முஸ்லிம் மக்களின் தனித்துவமான சமுதாய வாழ்வு, இஸ்லாமிய மத வாழ்வு, அவர்களின் நிலவுரிமை பாதிக்கப்படா வகையில் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் சபையொன்றை ஏற்படுத்தி அதற்குரியதான விசேட அதிகார நிர்வாக முறையொன்றை உருவாக்குதல்.

18. வடக்கு – கிழக்கில் இப்போது வாழும் சிங்கள மக்களின் விடயத்தில் மிகவும் நியாய பூர்வமான முறையிலும் மனிதாபிமான முறையிலும் அணுகு முறைகளைக் கையாளுகின்ற அதே வேளை புதிய சிங்களக் குடியேற்றங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை என்னும் நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பதுடன், கடந்த நாற்பதாண்டு காலமாக நடைபெற்று வந்த குடியேற்றத்திட்டங்கள் மூலம் குடியேறியுள்ள சிங்கள மக்கள் தொடர்பாக, தமிழ்ப் பேசும் மக்களின் பாதுகாப்பு, பொருளாதார நலன்பாதிக்கப்படா வகையில் மிகவும் நியாய பூர்வமான தீர்வொன்றைக் காணுதல்.

www.tamilarangam.net

இதேவேளை வடக்கு – கிழக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள மக்களுக்குப் பூரண பாதுகாப்பு உத்தரவாதத்தை உருவாக்குவதுடன் அவர்களின் அடிப்படை நலன்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படாது கவனித்துக் கொள்ளல்,

19. இலங்கையில் திருப்திகரமான அமைதி, பாதுகாப்பு நிலைமை ஏற்படும் வரை ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக வாழும் தமிழ் மக்களைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்களைக் கேட்டுக் கொள்வது. அத்துடன் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தையும், ஐரோப்பிய நாடுகளிலுள்ள மனித உரிமை ஸ்தாபனங்கள் மற்றும் சமூக சேவை ஸ்தாபனங்கள் ஆகியவற்றையும் இது தொடர்பான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கோருவது.

20. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்ப் பிரதேசங்களில் இடம் பெற்று வந்துள்ள கொலைகள், கொள்ளைகள், சேதங்கள், சித்திரவதைகள், காணாமற்போனோர், மோசடிகள், சீர்குலைப்புகள், சதிநாசகார வேலைகள் போன்ற அனைத்து விபரங்களையும் பற்றிய விசாரணை ஆணைக்குழு ஒன்றை ஏற்படுத்தி பக்க சார்பற்ற பூரண விசாரணை ஒன்றை மேற்கொள்ளல்,

21. — இந்தியா தமிழ் மக்களின் நட்புசக்தி என்பதைச் சந்தேகத்திற்கிடமின்றி ஏற்றுக் கொள்கின்ற அதே வேளை.

— தமிழ்ப் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள், பாதுகாப்பு தொடர்பாக இந்தியாவின் பொறுப்பைத் தொடர்ந்து வலியுறுத்துதல்,

— இந்தியப்படைகள் தமிழ் மக்களுக்கு உதவும் பொருட்டு வந்தனவே தவிர உபத்திரவம் கொடுக்கும் பொருட்டு அல்ல என்பதை நடைமுறையில் நிலைநாட்டுதல்,

— தமிழ்ப் பேசும் மக்களின் பாதுகாப்பைஉள்நாட்டுப்பலத்தில் உத்தரவாதம் செய்யக் கூடிய நிலைமையைப் படிப்படியாக அதிகரிப்பதன் மூலம் இந்தியப் படைகளின் தேவையைப் படிப்படியாகக் குறைத்தல்.

22. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும், அவசரகால சட்டங்கள் மூலம் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுவதற்கு எதிராகவும், தொழிலாளர் விரோத சட்டங்களுக்கு எதிராகவும் விடாப்பிடியாகத் தொடர்ந்து போராடுதல்.

23. தென்னிலங்கையிலுள்ள ஜனநாயக, இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகளுடன் புரட்சிகர உறவைக் கட்டி வளர்த்தல்; பொதுப் பிரச்சினைகளில் கை கோர்த்து நின்று போராடுதல்: தமிழ் மக்கள் சாதாரண சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல, அதேவேளை தமிழ் மக்கள் சிங்கள மக்களோடு சுய கௌரவத்தோடும் சமத்துவமான முறையிலும் சமாதானமாகவே வாழ விரும்புகின்றனர் என்னும் விடயத்தை உலகம் அறிய நிலை நாட்டல்.

24. உள்நாட்டில் குறுகிய இனவெறி, மதவெறி, சாதிவெறி, பிரதேசவெறி ஆகியவற்றுக்கு எதிராகப் போராடுகின்ற அதேவேளை, சர்வதேச ரீதியில் அணிசேரா நாடுகளின் அமைப்பின் கொள்கைகளைக் கடைப்பிடித்தலும்; சோசலிச நாடுகளோடு உறவைக் கட்டிவளர்த்தலும்; சர்வதேச ரீதியாக நடைபெறும் தேசிய, வர்க்க விடுதலைப் போராட்டங்களுக்கு ஒருமைப் பாட்டை வழங்குதல்.

நாம் சாதிக்க நினைப்பதை எவ்வளவு தூரம் நிறைவேற்றி முடிப்போம் என்பது—

1. தமிழ்ப் பேசும் மக்களின் ஒத்துழைப்பிலும்,

2. மாகாண சபை தடையின்றி இயங்குவதற்கு இந்திய–இலங்கை அரசாங்கங்கள் தரும் ஒத்துழைப்பிலும் தங்கியிருக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் எம்மைப் பொறுத்தவரையில் எமது குறிக்கோள்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதில் விடாப்பிடியாக உழைப்போம் என்பதில் மட்டும் உறுதியாக உள்ளோம். எமது பாதையில் எத்தனை தடைகள் வந்தாலும், யார் அந்தத் தடைகளைப் போட்டாலும் அவற்றை எதிர்த்துப் போராடியே தீருவோம்.


ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள் எமது மக்களின் நலனின் அடிப்படையில் ஒரு குறிக்கோளை மையமாக வைத்துச் செயற்படத் தொடங்கிறைல்

அதன் பின்னர் எதற்காகவும், எந்தத் தடைகள் போட்டாலும், என்ன முத்திரை குத்தப்பட்டாலும் பின்வாங்கமாட்டோம் என்பதை அனைவரும் அறிவர்.

எமது மக்களுக்குத் தேவைப்படுகின்ற அமைதி, ஜனநாயகம், ஒற்றுமை, புதியவாழ்வு· முன்னேற்றமான எதிர்காலம் என்பவற்றுக்காக யார் ஒத்துழைத்தாலும் அவர்களோடு நாங்கள் நண்பர்களாகச் செயற்படுவோம். மாறாக, அவற்றுக்கு எதிராகச் செயற்படுபவர்களுக்கு எதிராக எல்லா வடிவங்களிலும் போராடுவோம்.

நாங்கள் மக்களில்லாத மண்ணை நேசிக்க வில்லை; மக்களுக்காகவே மண்ணை நேசிக்கிறோம். மக்களே எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சக்தி என்னும் கருத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டவர்கள்.

**உறுதி குலையாது முன்னேறுவோம்;**
**இறுதி விளைவுகளை நிகழ்த்திக் காட்டுவோம்!**



**○ பாசிச கொலைவெறியின் வேர்களைக் கிள்ளி எறிவோம்!**

**○ மாகாணசபைத் தேர்தலை மாற்றத்துக்கான பாதையின் மைல்கல்லாக்குவோம்!**

**○ எமது ஸ்தாபனத்தை மக்கள் மத்தியில் ஆழப்படுத்தி விரிவுபடுத்துவோம்!**

**○ புதிய எதிர்காலத்திற்கான அடித்தளத்தைக் கட்டியெழுப்புவோம்!**

---

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்காக கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பி.இராமலிங்கம். அவர்களினால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்